# திருநெல்வேலி மாநகராட்சி

## 30.01.2023 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள் விவரம்

### *பொருட்கள்*

1. திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலம் பகுதிக்குட்பட்ட வார்டு எண்: 1,12,13,14 மற்றும் 29 ஆகிய பகுதிகளில் குடிநீர் கட்டணம் மாதம் ரூ.100/- வீதம் காலாண்டிற்கு ரூ.300/- என்பதற்கு பதிலாக ரூ.450/- ரூ.375/- என தவறுதலாக கணிணியில் உள்ளதால் கீழ்க்கண்ட வரிவிதிப்பு எண்களுக்கு திருத்தம் செய்து தரக்கேட்டு வரப்பெற்ற மனுக்கள் மீது இளநிலைபொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே கீழ்க்கண்ட வரிவிதிப்பு எண்களுக்கு குடிநீர் கட்டணம் மாதம் ஒன்றிற்கு ரூ.100/- வீதம் காலாண்டிற்கு ரூ.300/- என கணினியில் திருத்தம் செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | வரிவிதிப்பு எண் | தவறான குடிநீர் கேட்பு | திருத்தம் செய்ய வேண்டிய சரியான குடிநீர் கேட்பு |
|---|---|---|---|---|
| 1. | G.சண்முகவேல்<br>2,சீனியப்பன் திருத்து,<br>வடக்குத்தெரு,<br>தச்சநல்லூர் | 146/001/901121 | 450 | 300<br>2020-2021-I முதல் |
| 2. | S.மூக்கன்<br>30A, வடக்குதெரு<br>சத்திரம் புதுக்குளம் ,<br>தச்சநல்லூர் | 146/001/901327 | 375 | 300<br>2012-2013-III முதல் |
| 3. | K.எபனேசர்<br>46, பெரியம்மன்<br>கோவில்<br>தெரு,தச்சநல்லூர் | 146/014/900816 | 450 | 2021-2022-I முதல்<br>300 |
| 4. | T.சங்கரநாராயணன்<br>58,62,<br>வாலாஜப்பேட்டை,<br>நடுத்தெரு.தச்சநல்லூர் | 146/014/900204<br>146/014/900500 | 420<br>450 | 2022-2023-I முதல்<br>300 |
| 5. | R.சுடலைமுத்து<br>3,தேனீர்குளம்தெரு, | 146/014/901025 | 450 | 2018-2019-I<br>300 |

| | | | | |
|---|---|---|---|---|
| | தச்சநல்லூர் | | | |
| 6. | R.எலிசபெத்<br>157/D,5 கோகுல்நகர்<br>தச்சநல்லூர் | 146/001/900425 | 450 | 2022-2023-I<br>முதல் 300 |
| 7. | மீனாட்சி<br>17,வடக்கு தெரு<br>தச்சநல்லூர் | 146/013/900868 | 153 | 2009-2010 IV முதல்<br>300 |
| 8. | பஞ்சு முப்பிடாதி<br>1A,தெற்கு<br>பாலபாக்கியா நகர் | 146/012/900773 | 900 | 2018-2019-I முதல்<br>300 |
| 9. | தமிழகம்<br>175, 176 தெற்கு<br>பாலபாக்கியா நகர் | 146/012/900348 | 375 | 2021-2022-III முதல்<br>300 |
| 10. | கணபதி<br>32A, மேலத்தெரு,<br>தச்சநல்லூர் | 146/013/900107 | 450 | 2018-2019-III முதல்<br>300 |
| 11. | திருமதி.துர்கா<br>27/3,வாலாஜப்பேட்டை<br>நடுத்தெரு.தச்சநல்லூர் | 146/014/901112 | 450 | 2019-2020-II முதல்<br>300 |
| 12. | ஆண்டாள்<br>3,ஸ்கூல்தெரு,<br>தச்சநல்லூர் | 146/013/900235 | 372 | 2001-2002-III முதல்<br>300 |
| 13. | V.சேகர்<br>18L/1,புளியந்தோப்பு<br>வடக்கு தெரு,<br>மீனாட்சிபுரம் | 146/029/900514 | 600 | 2018-2019-I முதல்<br>300 |

**அலுவலகக் குறிப்பு**

தச்சநல்லூர் மண்டல பகுதிக்குட்ப்பட்ட வார்டு எண்:1,12,13,14 மற்றும் 29, ஆகிய பகுதிகளில் குடிநீர் கட்டணம் மாதம் ரூ.100/- வீதம் காலாண்டிற்கு ரூ.300/- என்பதற்கு பதிலாக ரூ.450/-, ரூ.375/- என தவறுதலாக கணினியில் உள்ளதால் பொருளில் கண்ட வரிவிதிப்பு எண்களுக்கு குடிநீர் கட்டணம் மாதம் ஒன்றிற்கு ரூ.100/- வீதம் காலாண்டிற்கு ரூ.300/- என திருத்தம் செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:அ6/516/2022)

## தீர்மானம் எண்: 215 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

2. திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட வார்டுகளில் சில வரிவிதிப்பு எண்களுக்கு அவற்றின் பயன்பாடு குடியிருப்பு என்பதற்கு பதிலாக வணிகம் எனக் குறிப்பிட்டு அதனடிப்படையில் வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் சில வரிவிதிப்பு

எண்களுக்கு வரிவிதிப்புதாரர்களால் மேல்முறையீடு தீர்வாயத்தில் மேல்முறையீடு செய்து வரித்தொகை குறைத்து தீர்ப்புரை பெறப்பட்டுள்ளது. மேலும் லோக அதலாத் மூலம் தீர்ப்புரை பெறப்பட்டுள்ளது. இவற்றிற்கு கணினியில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

எனவே இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளபடி சொத்து வரிவிதிப்பு எண்களுக்கு அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ளது போன்று 1) அக்கட்டிடங்களுக்கான பயன்பாட்டினை வணிகம் என்பதிலிருந்து குடியிருப்பு எனத் திருத்தம் செய்து, அதனடிப்படையில் வரித்தொகை திருத்திமைக்கவும் மற்றும் 2) மேல்முறையீட்டு தீாவாயம் மற்றும் லோக் அதலாத்தில் வழங்கப்பட்ட தீர்ப்புரையின்படி சொத்துவரி மற்றும் பயன்பாடு திருத்தியமைக்கவும் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு வரிவிதிப்பு எண்களுக்கான கேட்பில் திருத்தங்கள் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்: அ4/2368/2022

## தீர்மானம் எண்: 216 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

3. திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், வார்டு எண் 30, கைலாசபுரம் நடுத்தெரு, கதவு எண் 41-ல் அமைந்துள்ள கட்டிடம் கட்டிட அனுமதி எண் 24/2017/TP1, நாள் 15.06.2017ன்படி கட்டி முடிக்கப்பட்டு அதற்கு அரையாண்டு வரியாக ரூ.1331/-ம் திடக்கழிவு மேலாண்மை வரியாக ரூ.600/-ம் (Assessment No 146/030/904872 Old Assessment No: 146/006/02724 ) நிர்ணயம் செய்யப்பட்டு நிலுவையின்றி செலுத்தி வரும் நிலையில், மேற்படி வீட்டின் பழைய தீர்வை எண் 146/006/00769-க்கான அரையாண்டு தீர்வை தொகை ரூ.238/- மற்றும் திடக்கழிவு மேலாண்மை தொகை ரூ.180/- (Assessment No 146/030/901497 Old Assessment No: 146/15719) என்ற அடிப்படையில் 2019-2020/I முதல் 2022-2023/II முடிய மொத்த சொத்துவரித் தொகை (திடக்கழிவு மேலாண்மை தொகை உட்பட) ரூ.3582/- இரத்து செய்யப்படாமல் கணினியில் கேட்பு உள்ளது. இக்கேட்பினை இரத்து செய்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், வார்டு எண் 30, கைலாசபுரம் நடுத்தெரு, கதவு எண் 41-ல் அமைந்துள்ள கட்டிடத்திற்கு சிறப்பு வருவாய் ஆய்வாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலரின் அறிக்கையின்படி, புதிய சொத்துவரிவிதிப்பு எண் 146/030/904872-ல் சொத்துவரி செலுத்தப்பட்டு

வருவதால், அதற்கான பழைய வரிவிதிப்பு எண் 146/30/901497 ல் 2019-2020/I முதல் 2022-2023/II முடிய மொத்த சொத்துவரித் கேட்பு தொகை ரூ.3582/-ஐ கணினி கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.

(அ2/3083/2022-தச்சை மண்டலம்)

## தீர்மானம் எண்: 217 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

4. மாமன்றத் தீர்மானம் எண்: 349 நாள்: 27.12.2012-ல் திருநெல்வேலி மாநகராட்சி, நான்கு மண்டல அலுவலகப் பகுதிகளிலும் கரும்புக்கடை, மஞ்சள் மற்றும் கிழங்கு வகைகள் வைத்து தற்காலிகமாக வியாபாரம் செய்பவர்களிடம் 01.01.2023 முதல் 18.01.2023 முடிய உள்ள தினங்களுக்கு மாமன்றம் 2022-ல் நிர்ணயம் செய்த ஆக்கரமிப்பு கட்டணத் தொகையில இருந்து 10% கூடுதல் செய்து கீழ்க்கண்ட மூன்று இனத்திற்கும்ஆக்கிரமிப்பு கட்டணம்க நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் பார்வைக்கு மற்றும் அனுமதிக்கு

ஆக்கிரமிப்பு கட்டணம் நிர்ணயம் செய்யப்படும் விபரம்

| வ. எண். | இனம் விவரம் | 2022ல் நிர்ணயிக்கப்பட்ட ஆக்கிரமிப்பு கட்டணம் ரூ. | 10சதவீதம் உயர்வு | 2023-ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்படும் ஆக்கிரமிப்பு கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| அ. | 01.01.2023 முதல் 18.01.2023 முடிய 18 தினங்களுக்கு கரும்பு கடை ஆக்கிரமிப்பு கட்டணம் 6 x 6 அளவுள்ள காலியிடத்திற்கு | ரூ.4194/- | ரூ.419/- | ரூ.4613/- |
| ஆ. | 10.01.2023 முதல் 18.01.2023 முடிய வைக்கப்படும் கரும்பு கடை ஒன்றுக்கு ஆக்கிரமிப்பு கட்டணம் 6 x 6 அளவுள்ள காலியிடத்திற்கு (நாள் ஒன்றுக்கு) | ரூ.851/- | ரூ.85/- | ரூ.936/- |
| இ. | மஞ்சள் மற்றும் கிழங்குகள், தற்காலிகமாக சாலை ஓரங்களில் வியாபாரம் செய்வதற்கு ஆக்கிரமிப்பு கட்டணம் 6 x 6 அளவுள்ள காலியிடத்திற்கு (நாள் ஒன்றுக்கு) | ரூ.293/- | ரூ.29/- | ரூ.322/- |

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்ட விபரப்படி 2023-ம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு திருநெல்வேலி மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகப் பகுதிகளிலும் கரும்புக்கடை, மஞ்சள் மற்றும் கிழங்கு வகைகள் வைத்து தற்காலிகமாக வியாபாரம் செய்பவர்களிடம் 01.01.2023 முதல் 18.01.2023 முடியவுள்ள காலத்திற்கு ஆக்கிரமிப்பு கட்டணம் வசூல் செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம். அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதனை அங்கீகரிக்கலாம்.

**(அ1/10516/2009 மை.அ)**

## தீர்மானம் எண்: 218 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

5. திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட 24வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.அ. ரவீந்தர் அவர்கள் மாதா நடுத்தெருவில் உள்ள மாநகராட்சி பெண்கள் கழிப்பறை மிகவும் மோசமான நிலையில் எந்த நேரத்திலும் இடிந்து விழும் தருவாயில் உள்ளதெனவும், அதனை இடித்து தருமாறும் ,மேலும் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் அனைவரது வீடுகளிலும் மத்திய அரசின் திட்டத்தின்படி கழிப்பறை கட்டப்பட்டுள்ளதாகவும் ஆகையால் ஆபத்தான நிலையில் உள்ள மேற்படி கழிப்பிடத்தை இடித்து அப்புறப்படுத்திட கோரியுள்ளார்கள். அதன்படி மாதா நடுத்தெருவில் பயன்பாட்டில இல்லாமல் ஆபத்தான நிலையில் உள்ள பொது கழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்ட மிகவும் பழுதடைந்த நிலையில் ஆபத்தான நிலையில் உள்ள மாதா நடுத்தெரு பொது கழிப்பிடத்தினை பொதுமக்களுக்கு பாதுகாப்பினை கருதியும் மேற்கண்ட கழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்திட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(இ2//2930/2/022) திருநெல்வேலி மண்டலம்)**

## தீர்மானம் எண்: 219 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

6. திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், மேலவீரராகவபுரம் நகர ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் உள்ள வேப்ப மரத்தை அப்புறப்படுத்த ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்று 04.01.2023 அன்று பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கேட்கப்பட்டது. ஒப்பந்தபுள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஏலத்தில் 2 நபர்கள் கலந்து கொண்டதில் திரு.அ.இஸ்ராயில் ராஜா, என்பவரின் உச்ச ஏலக் கேள்வித் தொகையான ரூ.12,500/- நிர்ணயிக்கப்பட்ட குறுமத்

தொகை ரூ.10,929/-யை விட ரூ.1571/- கூடுதலாக உள்ளது. எனவே ஏலதாரர் திரு,அ.இஸ்ராயில் ராஜா, என்பவரின் ஏலத்தொகை ரூ.12,500/- ஏற்று அன்னாருக்கு வேலை ஆணை வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும்.

**அலுவலக குறிப்பு:**

மேலவீரராகவபுரம் நகர ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் உள்ள வேப்ப மரத்தை அப்புறப்படுத்த 04.01.2023 அன்று நடைபெற்ற ஏலத்தில் திரு,அ.இஸ்ராயில் ராஜா, என்பவரின் உச்ச ஏலத்தொகை ரூ.12,500/-னை ஏற்று அன்னாருக்கு வேலை ஆணை வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்:இ1-3499-2022**

**தீர்மானம் எண்: 220 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---